DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.171/2022**

**prosecution witness: Pw 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1, A2 absent 317 petition filed**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜ் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**14.07.2023**

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தங்கச்சிமடத்தில் வசித்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். வழக்கின் எதிரியை பார்த்தால் அடையாளம் தெரியும். கடந்த 17.10.2021-ம் தேதி பகல் 12 மணிக்கு பொந்தம்புளி பஸ் ஸ்டாப் அருகே போலீசார் வாகன சோதனையில் இருந்த போது எதிரி சரவணன் வந்த இருசக்கர வாகனத்தை போலீசர் சோதனை செய்தனர்.

2. அப்போது அவரது இருசக்கர வாகனத்தின் பவுச்சில் இருந்து திருட்டு நகைகளை போலீசார் எடுத்தனர். பின்பு 3 மணியளவில் என்னையும், மைகேல் என்பவரையும் நகர் காவல் நிலையத்தில் அழைத்ததன் பேரில் அங்கு சென்றோம். அங்கு ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது அதில் நானும், மைக்கேல் என்பவரும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் அ.சா.ஆ-2 ஆகும். வேறு எதிலும் நான் கையொப்பம் செய்யவில்லை.

**(**அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது**.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. போலீசார் விசாரணையில் கடந்த 17.10.2021-ம் தேதி பகல் 12 மணிக்கு நானும், எனது நண்பர் மைகேல் என்பவரும் பொந்தம்புளி மெயின் ரோட்டில் நின்றுகொண்டிருந்த போது இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தார் என்றும் அப்போது எதிரி சரவணன் ஓட்டி வந்த hero splender மோட்டார் வாகனத்தை சோதனை செய்த போது அவரது பவுச்சில் நகைகள் இருந்ததை விசாரித்த போது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

2. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் என் முன்னிலையிலும், மைகேல் என்பவர் முன்னிலையிலும் பதிவு செய்து அதில் நானும், மைகேல் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாள்ர தயார் செய்த அத்தாட்சியிலும் நானும், மைகேல் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. பின்னர் எதிரி சரவணன் அவர் வீட்டிற்கு அழைத்து சென்று எடுத்து ஆஜர் செய்த dell laptop ஐ எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. அந்த அத்தாட்சியில் நானும், மைகேல் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.